அ.வ.எண்: 51/2019 நாள்: 10.03.2026

வா.சா.1 –

ஜெகன் ஜான்

வில்லியம்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. எனக்கு தற்போது 35 வயதாகிறது. எனக்கு எந்த வயதில் விவரம் தெரிய ஆரம்பித்தது என்றால் 14 வயதில் விவரம் தெரிய ஆரம்பித்தது. நான் என்ன படித்தேன் என்றால் M.Phil முடித்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கான விபரங்களை எனது வழக்கறிஞருக்கு நான் தான் கூறினேன். நான் தாவா வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்ற விபரம் எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்துப் பார்த்தேனா என்றால், படித்துப் பார்த்தேன். அதன் விவரங்கள் எனக்கு தெரியும். பரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரைக்கு நான் பதில் உரை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் கோயம்புத்தூரில் உள்ள ஒரு பேக்கரியில் கேஷியராக வேலை பார்த்து வருகிறேன். 1ம் பிரதிவாதி தைனீஸ் எனது தாத்தா என்றால் சரிதான். என் தந்தைக்கு என்ன வயதாகிறது என்றால் தற்போது 65 வயதாகிறது.

2. எனது தந்தை தாவா சொத்து அமைந்துள்ள ஊரில் தான் நிரந்தரமாக

வசித்து வருகிறார் என்றும், நான் மட்டும்தான் தொழில் நிமித்தமாக வெளியூரில் இருந்து வருகிறேன் என்றும் சொன்னால் சரிதான். எனது தந்தை தற்போது நல்ல உடல்நிலையுடன் ஆரோக்கியமாகத்தான் உள்ளார் என்றால் சுமார் 10 வருடங்களாக பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். எனது தகப்பனார் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு உள்ளார் என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தை சொல்வதை புரிந்து கொண்டு பதில் சொல்லும் அளவிற்கு சுயநினைவு கொண்ட திறன் வாய்ந்தவர் என்றால் சரிதான். நான் தாவா வழக்கை எனது தகப்பனாரின் பவர் ஏஜென்ட் என்ற முறையில் தான் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரிதான். **(சாட்சியிடம் பவர் பத்திரம் காட்டப்பட்டது)** அந்த பவர் ஆவணத்தில் எந்த இடத்திலும் எனது தந்தை பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் .

3. மேற்படி பவர் ஆவணத்தில் எனது தந்தை ஆங்கிலத்தில் கையெழுத்து செய்துள்ளாரா அல்லது தமிழில் கையெழுத்து செய்துள்ளாரா என்றால், எனது தந்தை எப்பொழுதும் தமிழில் தான் கையெழுத்து செய்வார். மேற்படி ஆவணத்தில் கையெழுத்து செய்யும்போது எனது தந்தை பக்கவாத நோயால் பாதிக்கப்படவில்லை என்றால் அப்பொழுது நன்றாக தான் கையெழுத்து செய்தார். மேற்படி பவர் ஆவணத்தை எழுதுவதற்கு யார் விவரங்கள் கூறியது என்றால், எனது பெற்றோர் கூறினர். எப்பொழுது எங்கு வைத்து விபரங்களை கூறினர் என்றால் அது

பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி ஆவணம் எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்றும் அதில் எனது தகப்பனார் எங்கு வைத்து கையெழுத்து செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் அது பற்றி எனக்கு நினைவில் இல்லை. மேற்படி ஆவணத்தில் எனது தகப்பனாரின் புகைப்படங்கள் ஒட்டப்படவில்லை என்றால் சரிதான்.

4. மேற்படி ஆவணத்தில் சாட்சிகள் என்ற இடத்தில் யாருமே கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை எனது தந்தை தான் எழுதி கொடுத்தார் என்று நிரூபிக்கும் பொருட்டு இந்த ஆவணம் ஏற்படுத்தப்படவில்லை என்றால் எனது தந்தை தான் எழுதி கொடுத்தார். மேற்படி ஆவணத்தை எனது தந்தை தான் எழுதி கொடுத்தார் என்பதற்கான வேறு ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தை எங்கு வைத்து எப்போது யார் என்னிடம் கொடுத்தது என்றால் அது பற்றி எனக்கு நினைவில் இல்லை. மேற்படி ஆவணத்தில் நோட்டரி பப்ளிக் எங்கு வைத்து யார் முன்னிலையில் வைத்து கையெழுத்து செய்தார்கள் என்றால் அதில் கையெழுத்து பெறும் போது நானும் என் பெற்றோரும் உடன் இருந்தோம். மேற்படி நோட்டரி வழக்கறிஞர் வசித்து வருகிறார் என்றால் லட்சுமி தியேட்டர் அருகில் வசித்து வருகிறார். மேற்படி பவர் ஆவணம் எந்த தேதியில் எனக்கு எழுதி கொடுத்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு நினைவில் இல்லை.

5. மேற்படி நோட்டரி வழக்கறிஞரிடம் கையெழுத்து பெறும்பொழுது

ஆவணம் முழுவதுமாக தட்டச்சு செய்யப்பட்டு தயாரான நிலையில் தான் இருந்தது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் நோட்டரி வழக்கறிஞர் முன்பு தயார் செய்யப்படவில்லை என்றும் அவர் கையெழுத்து மட்டும்தான் செய்தார் என்றும் சொன்னால் சரிதான். மேற்படி ஆவணத்தை எனது பெற்றோர் எங்கு வைத்து தட்டச்சு செய்து தயார் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எனது பெற்றோர் எனக்கு எழுதிக் கொடுக்கவில்லை என்றும் குடும்பத்தில் குழப்பம் ஏற்படுத்துவதற்காக நானே ஏற்படுத்திக் கொண்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனாரை தாவா வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால், தயாராக உள்ளேன். தாவா பிராதை தாக்கல் செய்வதற்கு எனது வழக்கறிஞருக்கு எனது தந்தை நேரடியாக வந்து விவரங்கள் கூறவில்லை நான்தான் கூறினேன் என்றால், நாங்கள் மூவரும் ஒன்றாக வந்து தான் விவரங்கள் கூறினோம்.

6. எனது தந்தையை விசாரித்தால் வழக்கு பற்றிய உண்மை விபரமும் மேற்படி பவர் பத்திரம் பற்றிய உண்மை விவரமும் தெரியவரும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியான எனது தாத்தாவிற்கு மொத்தம் எத்தனை வாரிசுகள் என்றால் 7 ஆண் வாரிசுகள் மற்றும் 2 பெண் வாரிசுகள் ஆகும். அதில் ஒரு ஆண் வாரிசு இறந்துவிட்டார். 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்து அமைந்துள்ள ஊரில் தாவா சொத்தை தவிர மற்ற சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தற்போது யார் பராமரிப்பில் இருந்து வருகிறார் என்றால் எங்களது பராமரிப்பிலும் இருந்து வருகிறார்,

நாங்கள் மறைமுகமாக அவருக்காக பணம் கொடுத்து வருகிறோம். எனது பராமரிப்பில் இருக்கும் பொழுது நான் எதற்காக 1ம் பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் எனது மற்ற சித்தப்பாக்களின் தூண்டுதலின் பெயரில் தான் அவர் பத்திரத்தை ரத்து செய்தார் அதனால் அவரை வழக்கில் தரப்பினராக சேர்த்து உள்ளேன். எனக்கும் பிரதிவாதிகளுக்கும் இருக்கும் உறவு முறையை பற்றி எனது பிராதிலோ அல்லது நிரூபண வாக்குமூலத்திலோ நான் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல குறிப்பிட்டுள்ளேன்.

7. எனது தாத்தாவான 1ம் பிரதிவாதி யாரையும் மோசடி செய்யாத நல்ல மனிதர் என்றால் சரியல்ல, அவர் மோசடியான பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். 1ம் பிரதிவாதியை வரவழைத்து நீதிமன்றத்தில் விசாரித்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு தற்போது சுமார் 90,95 வயது இருக்கும் என்றால் சரிதான். தாவா வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக 2017 ஆம் ஆண்டு 1ம் பிரதிவாதி எனது தந்தையின் மீது வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால், அது பற்றி எந்த ஒரு விபரமும் எனக்கு என் தந்தைக்கும் தெரியாது. மேற்படி விசாரணையில் எனது தந்தை வழக்கறிஞர் மூலமாக ஆஜராகி இருந்தால் நான் சொல்வது பொய் என்றால் அவர் அவ்வாறு ஆஜராகவில்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.03.10 15:53:39 +0530